உ

சிவமயம்

பண்டத்தரிப்பு - காலையடி அருள்மிகு ஞானவேலாயுத சாமி 108 போற்றிகளும் பக்திப் பாடல்களும்

ஆ.த.குணத்திலகம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

உ

சிவமயம்

பண்டத்தரிப்பு - காலையடி அருள்மிகு ஞானவேலாயுத சாமி 108 போற்றிகளும் பக்திப் பாடல்களும்

ஆ.த.குணத்திலகம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்

ஆசியுரை

வாழ்க்கையில் எல்லோருக்கும் எல்லாப் பேறுகளும் கிட்டுவது இல்லை. கிடைத்த வரையில் நற்பேறுகளை மகிழ்வோடு ஏற்று மன நிறைவோடு வாழ்வதுதான் நல் வாழ்க்கை.

இறை பக்தியும் இனிய பண்பாட்டு மரபும் கொண்டு விளங்கும் பண்டத்தரிப்பு காலையடிக் கிராமத்தில் உள்ள திருக்கோயிலாக விளங்குவது காலையடி ஞான வேலாயுதர் கோயில். இவ் ஆலயத்தின் சிறப்புக்களை வெளிப்படுத்தும் வகையில் இவ்வூர் வாசியும், ஓய்வுநிலை ஆசிரியரும், அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய ஆ.த.குணத்திலகம் அவர்களால் "காலையடி ஞான வேலாயுத சாமி 108 போற்றிகளும், பக்திப் பாடல்களும்" என்னும் நூல் வெளியிடப்படுவது அறிந்து இந்நூல் சிறப்பாக வளர எல்லாம் வல்ல முருகனின் அருள் கிடைக்க வேண்டுமென்று இறைவனை வேண்டி எனது ஆசியையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"வெற்றி வடிவேலன் அவனிரு பாதங்களைப் புகழுவோம்
சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல்"

"குமரகுருமணி"
சிவஸ்ரீ.இ.உலகேஸ்வரக் குருக்கள்
காலையடி ஞான வேலாயுதர் தேவஸ்தானம்.



ஓ

அணிந்துரை

ஓய்வுபெற்ற ஆசிரியரும், அகில இலங்கை சமாதான நீதவானும் எனது நண்பருமான திரு.தம்பித்துரை குணத்திலகம் அவர்கள் தனது ஓய்வுக் காலத்தை பயனுடையதாக சிறந்த முறையில் பயன்படுத்துவதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு மனிதனுக்கு வாழ்க்கையில் மூன்று கடமைகள் உண்டு. அதில் முதல் இரண்டு கடமைகளையும் முடித்து மூன்றாவது கடமையாகிய சமூக சேவையினை இவர் சமயத் துறையின் மூலம் செய்து வருவது மகத்தான சேவையாகும்.

இவர் இதற்கு முன்னர் மூன்று ஆன்மீக நூல்களை வெளியிட்டதை நான் அறிவேன். இப்போது காலையடி ஞான வேலாயுத சாமி மீது பல கீர்த்தனைகள், பல்லவி, அனுபல்லவியுடன் கூடிய பாடல் களாகப் பாடித் தொகுத்து ஒரு நூலாக வெளியிடுவதையிட்டு நான் பெருமைப்படு கிறேன். இவரது இந்தச் சேவையின் மூலம் இந்தத் தலத்தின் பழமையும், சிறப்பும், மகிமையும் வெளிப்படுத்தப்படுகிறது. இதனால் இன்று சீரழிந்து கொண்டிருக்கும் எங்கள் இளம் சமுதாயத்திற்கு இது ஒரு திருப்பு முனையாக அமையுமென்பதில் சந்தேகமில்லை.

இவர் எமது சமயத்தின் மீது கொண்ட பக்தியின் காரணமாகவும், சமூகத்தின் மீது வைத்துள்ள விசுவாசம் காரணமாகவும் இப்படிப்பட்ட சேவையைச் செய்து வருகிறார். இவரது இந்தச் சேவையானது பலரைப் பக்திநெறிக்கு இட்டுச் செல்லும் என்றும் இன்னும் சிலரை பாடல் எழுதும் துறைக்குச் செல்ல வழி வகுக்கும் என்றும் கூறுவதில் எந்தவித தவறும் இல்லை. இவர் இந்தத் துறையில் மேலும் பல நூல்களை ஆக்கி சமயத்திற்கும், சமூகத்திற்கும் பயனுள்ளவராக வாழ எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு உடல், உள, ஆரோக்கியத்தைக் கொடுக்க வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்

ஓய்வுபெற்ற ஆசிரியர். சைவப்புலவர். கலாபூசணம்

ஆ.கனகரத்தினம்.



ஓ

நன்றி நவிலும் என்னுரை

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்" என்னும் அருளாளர் வாக்குக்கமைய என்னால் முடிந்தவற்றை நான் பிறந்த சமயத்துக்கும், சமூகத்துக்கும் செய்ய வேண்டும் என்னும் நோக்கமே எனது இவ் ஆக்கங்கள். ஒருவர் எழுதும் ஆற்றல் இருந்தபோதும் மற்றவன் விமர்சனத்துக்கு அஞ்சி எழுதாமலே இருந்து விடுகிறான். எந்த ஆற்றலும் இல்லாத சிலரிடம் இருக்கும் ஒரே ஒரு ஆற்றல் விமர்சனமே. எனவே எனது ஆக்கங்களை ஆதரிப்பவர்கள் இருக்கும் அதேவேளை விமர்சனம் செய்பவர்களும் இருக்கத்தான் செய்வார் கள். இருந்தும் என்னை எழுதுவதற்குத் தூண்டிவரும் என் நண்பர் ஓய்வுபெற்ற ஆசிரியர், சைவப்புலவர், கலாபூஷணம் திரு. ஆ.கனகரத்தினம் அவர்கள் இவ்வாக்கத்துக்கு அணிந்துரை வழங்கிய மைக்காக என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஆசியுரை வழங்கி வாழ்த்திய காலையடி ஞான வேலாயுதர் தேவஸ்தான குருக்கள் ஐயா சிவஸ்ரீ.இ.உலகேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கு முதற்கண் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து இங்கு பாடப்பட்ட பாடல்களுக்கு இசை அமைத்து உதவிய காரைநகர் இந்துக்கல்லூரி இசை ஆசிரியை திருமதி.பங்கயச்செல்வி முகுந்தன் அவர்களுக்கும் என் மனப்பூர்வ நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து இந்நூலை குறுகிய காலத்தில் திறம்பட அச்சிட்டுதவிய பண்டத்தரிப்பு வானவில் அச்சகத்தினர்க்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

12.05.2015
சில்லாலை.

ஆ.த.குணத்திலகம் J.P.
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

காலையடி ஞான வேலாயுத சாமி 108 போற்றிகள்

காப்பு வெண்பா

தொல்லைகள் நீங்கிச் சுகம்பல அளித்திடும்
சில்லையூர் சாந்தை விநாயகா - எல்லையில்லா
காலையடி ஞானவேலாயுதன் போற்றி பாட
சாலவே எனக்கருள் தா

1) ஓம் அப்பனே முருகா போற்றி
2) ஓம் அம்பிகை பாலா போற்றி
3) ஓம் அயனைச் சிறைசெய்த தேவனே போற்றி
4) ஓம் அசுரனை அழித்த குமரனே போற்றி
5) ஓம் அக்கினிப் பொறியாறில் உருவானவனே போற்றி
6) ஓம் அபயக்கரம் அளிக்கும் அப்பனே போற்றி
7) ஓம் அம்மையப்பன் உலகமென உணர்ந்தவனே போற்றி
8) ஓம் ஆறுமுகம் கொண்ட நாதனே போற்றி
9) ஓம் ஆறிரு கரமுடைய ஐயனே போற்றி
10) ஓம் ஆற்றுப் படையின் நாயகனே போற்றி
11) ஓம் ஆறுபடை வீட்டின் அதிபதியே போற்றி
12) ஓம் ஆறு பெண்களால் வளர்ந்தவனே போற்றி
13) ஓம் ஆனை முகத்தானுக் கிளையோனே போற்றி
14) ஓம் ஆதி அருணாசலம் அமர்ந்தவனே போற்றி
15) ஓம் ஆண்டியாய் பழனியில் அமர்ந்தவனே போற்றி
16) ஓம் ஆடும் மயில் மீது ஊர்பவனே போற்றி
17) ஓம் ஆணவ மலமழிக்கும் வேலவனே போற்றி
18) ஓம் இகபர சுகம் அளிப்பவனே போற்றி
19) ஓம் இடும்பனை ஆட்கொண்ட கடம்பனே போற்றி
20) ஓம் இருளை அகற்றிடும் சோதியே போற்றி
21) ஓம் இலங்கு திருமேனி உடையவனே போற்றி
22) ஓம் இடுக்கண் துடைத்திடும் தூயவனே போற்றி
23) ஓம் இந்திரன் தோள் அமர்ந்த சுந்தரனே போற்றி
24) ஓம் ஈசன் திருமகனில் இளையவனே போற்றி
25) ஓம் ஈசனுக்கு ஆசானான இளமுருகா போற்றி
26) ஓம் ஈஸ்வரி அணைத்தெடுத்த ஆறுமுகா போற்றி
27) ஓம் ஈராறு தடந்தோள் உடையவனே போற்றி
28) ஓம் ஈஸ்வரியின் அருட்சக்தி வேலவனே போற்றி
29) ஓம் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் வல்லவனே போற்றி
30) ஓம் உலகை வலம்வந்த ஞானகுருவே போற்றி
31) ஓம் ஊருக்குள் உறைகின்ற உத்தமனே போற்றி

32) ஓம் ஊருய்ய எழுந்தருளி இருப்பவனே போற்றி
33) ஓம் எல்லை இல்லாத பெருங்கடலே போற்றி
34) ஓம் எம்மவருக் கருள்செய்யும் ஏந்திலையே போற்றி
35) ஓம் எட்டுத் திக்கையும் ஆழ்பவனே போற்றி
36) ஓம் ஏழுமலையில் எழுந்தருள்பவனே போற்றி
37) ஓம் ஏகதந்த நாயகனின் இளையவனே போற்றி
38) ஓம் ஏந்துவோரைக் காக்குமெங்கள் அப்பனே போற்றி
39) ஓம் ஏர்பிடிக்கும் காலையூரில் உறைபவனே போற்றி
40) ஓம் ஏறுமயில் ஏறி விளையாடுவோனே போற்றி
41) ஓம் ஐங்கரனின் தம்பியே ஆறுமுகனே போற்றி
42) ஓம் ஐயனார் சோதரனே மைத்துனனே போற்றி
43) ஓம் ஐம்பூதம் அனைத்துக்கும் அதிபதியே போற்றி
44) ஓம் ஐம்பொறியை அடக்குவோர்க்கு அருள் செய்வாய் போற்றி
45) ஓம் ஒன்றாயும் பலவாயும் இருப்பவனே போற்றி
46) ஓம் ஒளியையும் இருளையும் தருபவனே போற்றி
47) ஓம் ஒளிந்த மாமரத்தைப் பிளந்தவனே போற்றி
48) ஓம் ஓதுவார் துயர் தீர்க்கும் உத்தமனே போற்றி
49) ஓம் ஔவையின் கர்வத்தை அடக்கினாய் போற்றி
50) ஓம் ஔவைக்கு அறிவுரைத்த கொவ்வைச்செவ்வாய் போற்றி
51) ஓம் ஔடதமாய் நின்று அருள்பவனே போற்றி
52) ஓம் கந்தனே கஜமுகன் தம்பியே போற்றி
53) ஓம் கதிரமலையில் உறையும் வேலவனே போற்றி
54) ஓம் கற்றவர் சூழ் காலையடிக் கந்தனே போற்றி
55) ஓம் கங்கை அணிந்தவன் மைந்தனே போற்றி
56) ஓம் கந்தபுராண காவியத் தலைவனே போற்றி
57) ஓம் கருணைக் கடலே காருண்யனே போற்றி
58) ஓம் காளைகள் காத்த கதிர்வேலவனே போற்றி
59) ஓம் கார்த்திகைப் பெண்கள் முலையுண்டவனே போற்றி
60) ஓம் காரிகைகள் இருவரைப் புணர்ந்தவனே போற்றி
61) ஓம் கீரனைச் சிறைமீட்ட குமரனே போற்றி
62) ஓம் குன்று தோறாடும் குமரனே போற்றி
63) ஓம் குறத்தி வள்ளியைப் புணர்ந்தவனே போற்றி
64) ஓம் குன்றுருவ வேல்வாங்கி நின்றவனே போற்றி
65) ஓம் கூறுமடியார்கள் வினை தீர்ப்பவனே போற்றி
66) ஓம் சரவணபவனே சங்கரன் மகனே போற்றி
67) ஓம் சண்முகம் கொண்ட வடிவேலவனே போற்றி
68) ஓம் சஷ்டியில் மாவறுத்த சண்முகனே போற்றி
69) ஓம் சரவணப் பொய்கையில் மலர்ந்தவனே போற்றி
70) ஓம் சாந்தகுணம் கொண்ட காந்தனே போற்றி

71) ஓம் சான்றோர்கள் போற்றும் காலைக் குமரனே போற்றி
72) ஓம் சிவனுக்குப தேசம்செய்த சிவகுருவே போற்றி
73) ஓம் சிந்திப்போர் மனதில் குடியிருப்பவனே போற்றி
74) ஓம் சித்திகள் தந்திடும் செவ்வேள் போற்றி
75) ஓம் சுப்பிரமணியனே சுந்தரனே போற்றி
76) ஓம் சூரனுக்கு அருள் செய்த தேவனே போற்றி
77) ஓம் செட்டியார் ஸ்தாபித்த செந்தூரனே போற்றி
78) ஓம் சேவற் கொடியுடைய வீரனே போற்றி
79) ஓம் சேந்தனே சிவனார் திருமகனே போற்றி
80) ஓம் சேயனே மாயவனார் மருமகனே போற்றி
81) ஓம் சொல்லற் கரிய பெரும் சோதியே போற்றி
82) ஓம் ஞானவேல் பெற்ற வீரனே போற்றி
83) ஓம் ஞானமறிவித்த ஞானபண்டிதா போற்றி
84) ஓம் தந்தைக்கு உபதேசம் செய்தவனே போற்றி
85) ஓம் தணிகை மலையில் அமர்ந்தவனே போற்றி
86) ஓம் தமிழர் கடவுளான தயாளனே போற்றி
87) ஓம் தாயாக எமைக்காக்கும் தங்கவேலே போற்றி
88) ஓம் தெய்வயானையை மணந்தவனே போற்றி
89) ஓம் தேனும் தினையுமுண்ட திருமகனே போற்றி
90) ஓம் தேவர்கள் துயர் களைந்த தலைவனே போற்றி
91) ஓம் தேவேந்திரனைச் சிறைமீட்ட கந்தனே போற்றி
92) ஓம் பழனி மலையாக நின்றவனே போற்றி
93) ஓம் பழமுதிர் சோலையில் அமர்ந்தவனே போற்றி
94) ஓம் பண்டாரமாக நின்ற பாலமுருகா போற்றி
95) ஓம் பாட்டிக்குச் சுட்டபழம் கொடுத்தவனே போற்றி
96) ஓம் மயூரமதில் மேவும் மால் மருகா போற்றி
97) ஓம் மாறுபடு சூரனை வதைத்த சங்கரா போற்றி
98) ஓம் முருகு வதனனே முருகா போற்றி
99) ஓம் முத்தான முத்துக் குமரனே போற்றி
100) ஓம் வள்ளிமேல் மோகம் கொண்ட விருத்தனே போற்றி
101) ஓம் வற்றாத அழகு தவழ் வதனனே போற்றி
102) ஓம் வள்ளி தெய்வானையுடன் உறைபவனே போற்றி
103) ஓம் வெற்றிவேல் ஏந்திய கந்தனே போற்றி
104) ஓம் நற்றவ மணியானே நம்தலைவா போற்றி
105) ஓம் நான்முகற்கு மருமகனே நாயகனே போற்றி
106) ஓம் நாயேனுக் கருள்செய்ய நாடியருள்வாய் போற்றி
107) ஓம் நெற்றிக் கண்பொறியில் உதித்தவனே போற்றி
108) ஓம் காலையடியுறை ஞானவேலா போற்றி போற்றி !

- முற்றிற்று -

மறுபதிப்பு

காலையடி அருள்மிகு ஞான வேலாயுத சாமி ஆலயம் நீண்ட காலமாக இடும்பன் ஆலயம் என அழைக்கப்பட்டு வந்தது. இன்றும் பலரால் இடும்பன் ஆலயம் என்றே அழைக்கப்படுகின்றது. இதன் காரணம் முருகனால் ஆட்கொள்ளப்பட்ட இடும்பாசுரன் விருப்பப்படி இடும்பனைத் தன்னுடன் இருந்து குற்றேவல் செய்ய முருகன் அனுமதித்ததால் முருகன் ஆலயங்கள் சிலவற்றில் இடும்பனைப் பரிவார தெய்வமாக வைக்கும் வழக்கம் ஏற்பட்டது. அவ்வாறே காலையடி முருகன் ஆலயத்திலும் வைத்து வழிபட்டமையால் அது இடும்பன் ஆலயம் என அழைக்கப்பட்டது.

இடும்பன்

தமிழ் நாட்டில் இடும்பாவனம், திருக்கன்றாப்பூர் என்னும் இடங்களில் இடும்பன் சிவனைப் பூசித்து வரம் பெற்றதாக ஐதீகம் உண்டு. இடும்பவனம் என்னும் பெயர் இடும்பனால் வந்ததாகக் கூறப்படுகின்றது. இடும்பவனம் தஞ்சாவூர் மாவட்டத்திலேயுள்ள திருத்தலமாகும். இடும்பவனத்துக்கு அண்மையில் இடும்பன் தலைநகரம் குன்றலூர் அமைந்திருந்ததாகக் கூறுவர்.

இடும்பன் வரலாறு பழனித் தல புராணத்திலே கூறப்பட்டுள்ளது. அகத்திய முனிவர் கந்த மலையின் சிகரங்களிற் சக்தி சிகரம் சிவ சிகரம் என்னும் இரண்டையும் சக்தி சிவமாகப் பாவித்துப் பூசித்துக் கந்தவேளின் உத்தரவின்படி அவற்றைப் பொதிய மலைக்குக் கொண்டு வந்து பூசிக்கக் கருதி பெயர்த்து வந்தார். பூர்ச்சவனம் என்னும் தலத்திலே முருகனின் திருவருளினாலே அச்சிகரங்களை வைத்து விட்டுப் பொதிகை நோக்கி வந்து கொண்டிருந்தார்.

சூரபன்மன் குலத்தோர்க்கு வில்வித்தை முதலிய வித்தைகளைப் பயிற்றிய இடும்பாசுரன் முருகப்பெருமானால் அசுரர்கள் அழிக்கப்பட மனைவி இடும்பியுடன் மகேந்திர புரியை விட்டு வன சஞ்சாரம் செய்யச் சென்றான். அவ்வழியிலே திருக்குற்றாலத்திற்கு அருகே அகத்திய முனிவரைக் கண்டு வணங்கித் தன்னை ஆட்கொள்ள வேண்டினான். அகத்தியர் திருக்கேதாரத்திற்குப் பக்கத்திலுள்ள பூர்ச்சவனத்திலே இருக்கும் இரு சிகரங்களையும் எடுத்துப் பொதிகை மலைக்குக் கொண்டு வருவாயானால்

பெறற்கரிய பெரும் பேறடைவாய் எனக்கூறி அவற்றை அடையும் வழிகளை உணர்த்தி மூலமந்திரம் உபதேசித்து அனுப்பினார். இடும்பன் மனைவியோடு அகத்தியர் கூறிய வழியே சென்று இரு சிகரங்களையும் கண்டு மகிழ்ந்து பூசித்து மூலமந்திரத்தை விதிப்படி உச்சரித்துத் தவம் செய்தான்.

அப்பொழுது பிரமதண்டம் புய தண்டாகவும். அட்ட திக்கு நாகங்கள் கயிறாகவும் தன் பக்கத்தில் வந்ததைக் கண்டு அதிசயத்துடன் பாம்புகளை உறிக்கயிறாக பிரமதண்டுடன் பிணைத்து இரு சிகரங்களையும் இருபக்கத்திலும் பிணைத்து மூலமந்திரத்தை உச்சரித்தபடி தோளிற் சுமந்து காவடி எடுப்போர் போல் நடந்து சென்றான்.

பழனியை அடைந்தபோது முருகன் திருவிளையாடலால் இடும்பனுக்குக் காவடி அதிபாரமாகத் தோன்ற அந்த இடத்தில் இறக்கி வைத்து இளைப்பாற்றினான். பின்பு காவடியைத் தூக்க முயன்றபோது முடியாது போகவே என்ன நடந்தது எனச் சுற்றிப் பார்த்தான். சிவகிரியின் ஒரு சாரலிலுள்ள குராமர நிழலிலே தண்டாயுதபாணியைக் கண்டு அவன் யாரென அறியாது வழியை விடும்படி வற்புறுத்தினான். முருகன் தன் திருவிளையாடலைத் தொடக்கி "உன்னிடம் வலிமை இருந்தால் கொண்டு செல்" எனக் கூறினான். ஆத்திரமடைந்த இடும்பன் குராமரத்தடியில் நின்ற தண்டாயுதபாணிமேற் பாய்ந்தபோது அவ்விடத்திலேயே வீழ்ந்திறந்தான். பிரமதண்டும் நாகங்களும் அஞ்சி அகன்று அகத்தியரிடம் செய்தியைக் கூறிவிட்டு தம்மிடம் சென்றன. இடும்பியின் அழுகுரலுக்கிரங்கிய முருகப்பெருமான் மாங்கலியப் பிச்சை அருளினான்.

இடும்பன் துயில் நீக்கி எழுந்தவன் போல் எழுந்து முருகனை வணங்கி அம்மலையடியில் இருந்து குற்றேவல்புரிய வரம்கேட்டு இரப்ப பெருமானும் அவ்வாறே அருளினான். இடும்பன் தான் இரு மலைகளையும் எடுத்து வந்ததுபோல் தமது பாபச் சுமையை நீக்கக் காவடி எடுத்துவரும் அடியார்களுக்கு அருளும்படியும் வேண்டியதாகக் கூறப்படுகின்றது.

இடும்பன் கதையுடன் தொடர்புடைய காவடி இன்று பல வடிவங்களில் எடுக்கப்படுகிறது. இதன் பின்னர் முருகன் கோயில்களில் இடும்பனைப் பரிவார மூர்த்தியாக வழிபடும் வழக்கம் ஏற்பட்டது. இவ்வாலயங்களில் முருக மஹோற்சவம் முடிந்தபின் இடும்ப பூசை நடைபெறுவது வழக்கில் காணப்படுகிறது.

(இந்து கலைக் களஞ்சியம்)

காலையடி முருகன் பக்திப் பாடல்கள்

இராகம் : ஹம்சத்வனி **தாளம் :** ஆதி

1)

பல்லவி

காலையடி தனில் வாழும் முருகா
கார்மேக வண்ணன் திருமாலின் மருகா - காலையடி

அனுபல்லவி

சிவனுக்கு உரை செய்த நாதா - கொடுஞ்
சூரனைச் சங்கரித்த சூரசங்காரா - காலையடி

சரணம்

தெய்வானை அம்மனின் தேவா - குற
மகள் வள்ளி நாயகி யின் ஆசைநாதா
ஓராறு முகம் கொண்ட முருகா - நீயும்
ஈராறு கரங்கொண்டே எழுந்தருள்வாயே - காலையடி

இடும்பனை ஆட்கொண்ட சீலா - உன்
உடனுறையும் தெய்வமாய் கொண்ட கதிர்வேலா
காளைகள் சூழ்ந்து நின்றதனால் - நீ
காலையடி வேலவன் என்ற பெயரானாய் - காலையடி

சம்பில்த் துறையினில் வணிகர் - அன்று
வியாபாரம் செய்து குடியேறினர் இங்கு
வந்தவர் வழிபட என்று - உன்னை
வைத்து வணங்கினர் பணிவுடன் அன்று - காலையடி

இராகம் : சண்முகப்பிரியா **தாளம் :** ஆதி

2) **பல்லவி**

காலமும் உனைப்பாட அருள் தருவாய்
காலை யடிவேலா கதிர்வேலவா முருகா - காலமும்

அனுபல்லவி

கற்றோரும் மற்றோரும் கூடும் காலையூரில்
பெற்றோராய் இருந்தெம்மைப் பேணி அருள்புரிவாய்
நற்றவ மணியானே நாதன் திருமகனே
உற்ற துயர் களையும் மாலவன் மருமகனே - காலமும்

சரணம்

ஊரவர் ஒன்றாகக் கூடிநின்று உன்னை
நித்தமும் போற்றிடக் கருணை செய்வாய்
காளைகள் காத்த எங்கள் கந்தவேளே
காலமெல்லாம் உனைப் பாட அருள் தருவாய் - காலமும்

வேண்டிய வரம்தன்னை அளித்திடுவாய் வேலா
ஆண்டியாய் இருந்திங்கு அருள்புரிவாய் அப்பா
ஆண்ட தமிழினம் அடிமைத் தழை அறுத்து
மீண்டுவர ஒரு வரம் தருவாய் கந்தா - காலமும்

இராகம் : அடானா **தாளம் :** ஆதி

3)

பல்லவி

காத்தருள் புரிவாயே காலையடிக் கந்தா
கருணை செய்வாய் குற வள்ளி மணவாளா - காத்தருள்

அனுபல்லவி

சரித்திரம் கூறிடும் சம்பில்த்துறையயலில்
கருத்துடனே அமர்ந்த கதிர்வேலவா குகனே - காத்தருள்

சரணம்

வைகாசியில் தேரேறி வந்தருள்புரியும் அப்பா
வணங்கிடுவோற் குறை தீர்ப்பதுன் கடனன்றோ
ஓடியே வருகின்றோம் உன்னடி தொழுதேத்தி
பாடிப் பரவுகின்றோம் பச்சை மயில் வாகனா - காத்தருள்

மாயவன் மருமகனே மாதுமை புத்திரனே
ஆலமர் அப்பனின் ஆறுமுக மைந்தனே
காலமும் உனைத் துதிக்கும் வரம் தருவாய் எங்கள்
காலையடி வேலா கார்த்திகேயா கடம்பா - காத்தருள்

இராகம் : பந்துவராளி **தாளம் :** ஆதி

4) **பல்லவி**

ஏறு மயில் மீது முருகா காலை
யூரினில் அமர்ந்துள்ள வேலா - நீ
ஐங்கரனுக் கிளை யோனாய் இங்கு
அவதரித்தாய் சிவபாலா இங்கு
அவதரித்தாய் சிவ பாலா - நீ ஏறு மயில்

சிவனாரின் நுதற் கண்ணிலிருந்தே - அன்று
சிந்திய பொறி ஆறும் வந்தே
சரவணப் பொய்கையில் விழுந்தே - ஆறு
கார்த்திகைப் பெண்ணிடம் வளர்ந்தாய் ஆறு
கார்த்திகைப் பெண்ணிடம் வளர்ந்தாய் - நீ ஏறுமயில்

மாதவ முனிவரின் பலத்தால் அந்த
மாயையின் சேர்க்கையில் உதித்த
மாவசுரர் கர்வம் அடக்கி ஊரும்
மயிலுடன் சேவலைப் பெற்றாய் - ஊரும்
மயிலுடன் சேவலைப் பெற்றாய் - நீ ஏறுமயில்

இந்திரன் மகள் தெய்வயானையை - ஈசன்
இசைவுடன் திருமணம் செய்தாய்
வள்ளியின் மேல் மோகங் கொண்டே குற
வம்சத்தில் மருமகனானாய் - குற
வம்சத்தில் மருமகனானாய் - நீ ஏறுமயில்

இராகம் : காபி

தாளம் : ஆதி

5)

பல்லவி

காலையடிக் கந்தனே முருகா
கதிர்வேலவனே குகனே
காளைகள் சூழ் கடம்பா எம்மைக்
காத்திட வேண்டுமையா - காலையடி

அனுபல்லவி

நாடிவரும் அடியார் தமக்கு
நலங்கள் பல அளிப்பாய்
வாடி வணங்குகின்றோம் எமக்கு
வந்தருள் செய்யுமையா - காலையடி

சரணம்

வள்ளி தெய்வானையுடன் இங்கு
வதியும் திருக் குமரா என்றும்
கள்ளமில்லாமல் வரும் அடியார்
குறைகள் களையும் ஐயா - காலையடிக்

வேலினைக் கையில்க் கொண்டு வரும்
வேதனை நீக்கிடுவாய் நாளும்
வேண்டியே துதித்திடுவோம் நீயும்
விரைந்தருள் புரியுமையா - காலையடிக்

சூரனை வதைத்தே நீயும் தேவர்
துயர்தனைப் போக்கினாயே
பாரிலுள் ளோர் பலரும் பகர்
காலை யடி வேலா - காலையடிக்

இராகம் : வலஜி **தாளம் :** ஆதி

6) **பல்லவி**

காளைகள் சூழ்ந்த திரு முருகா
காலை யூர்தனில் எழுந் தருளும் நாதா - காளைகள்

அனுபல்லவி

பாரிலுள்ளோர் போற்றும் பரமசிவன் மைந்தா
பன்னிருகை வேலா பரந்தாமனின் மருகா - காளைகள்

சரணம்

சூரனை வதம் செய்த சுந்தர மூர்த்தியே
கோர அசுரர்களின் கொடுமை ஒழித்தவனே
இடும்பனுக் கருள் புரிந்து இறை பதம் கொடுத்தவனே
கடம்பனே கந்தனே கதிர் வேலாயுதனே - காளைகள்

கார்த்திகைப் பெண்களின் கனக முலை பருகி
குழந்தைகள் ஆறாய் தனித்தனி வளர்ந்தவனே
அன்னை பார்வதி தன் திருக்கரத்தால் அணைத்து
ஆறுமுகன் உன்னை அவனிக்கு அளித்தனனே - காளைகள்

கற்றவர் மலிந்தோங்கும் காலையடி தன்னில்
சுற்றத்தார் என்றும் போற்றி வணங்கிட
அற்றார் அழிபசி தீர்த்தே மகிழ்ந்திட
நற்றவம் புரிந்திடும் நம் சிவ குருநாதா - காளைகள்

இராகம் : ஹிந்தோளம் **தாளம் :** ஆதி

7)

பல்லவி

காலையடி வாழும் கந்த மூர்த்தியே
கதிர் வேலனே குகனே கார்த்திகேயனே - காலையடி

சரணம்

அரச மரத்தடியில் இருந்தாயே அன்று
அண்டினோர்க் கருள் செய்தாயே நின்று
பிரமனின் கர்வமதை அடக்கிச் சிறையிலிட்டு
பிதாவுக்கே பிரணவத்தை விளக்கினாயே முருகா - காலையடி

ஆண்டியாய் பழனி மலையில் அமர்ந்திருந்தே
வேண்டிய வரங்களை விரும்பி அளித்தவனே
வண்ண மயில்மீதில் வலம்வரு நாயகனே
வடிவேலனே நீயும் வந்தருள் புரிவாயே - காலையடி

அண்ணனை மறந்த நீ அவதியடைந்த நீ
அவனை நினைந்தே பின் அவனருள் பெற்றாயே
உலகை வலம் வந்தநீ மலையில் அமர்ந்தாயே
உன்னையே வணங்குகின்றோம்
எமக்கருள் செய்வாயே - காலையடி

இராகம்: வஸந்தா **தாளம்:** ஆதி

8) **பல்லவி**

பிறவிப் பெருங்கடல் நீந்த அருள் புரியும்
குமரப் பெருமானே சரணமையா - ஐயா பிறவி

அனுபல்லவி

பன்றிக்குப் பால் கொடுத்த பரமனின் திருக்குமரா
பல்லோரும் துதிக்கும் எங்கள் காலையடி வேலா - பிறவிப்

சரணம்

வள்ளி தெய்வானையுடன் வண்ண மயில் மீதில்
வலம் வந்தே அருளும் வேல் முருகா
அள்ளிப் பருக அருள் அமுதமளித்திடும்
ஆறுமுகனே என்றும் சரணமையா - ஐயா பிறவிப்

வேலினைக் கையில் ஏந்தி வினைகளை அறுத்திடுவாய்
காலினைப் பிடித்திடுவோம் கருணை செய்யுமையா
மாலினை மாமனாகக் கொண்டவனே முருகா
பாலினைப் பொழிந்துன்னைப் போற்றுகின்றோம் ஐயா - பிறவிப்

ஞானப் பழமான ஞான பண்டிதன் நீயே
கானக் குறவள்ளி காதல் மண வாளா
மானைத் தேடித் தினைப் புனம் சென்ற வேடா
ஆனைமுகன் தம்பியே ஆறுமுக சாமியே - பிறவிப்

இராகம் : கல்யாணி **தாளம் :** வசந்தப்

9)

பல்லவி

முருகனைத் தொழுதிடுவோம் மால்
மருகனைத் தொழுதிடுவோம் - முருகனை

அனுபல்லவி

காலையடியில் வாழும் கதிர்
வேலாயுதனை நாளும்
பாடிப் பணிந்திடுவோம் கூத்
தாடிப் பணிந்திடுவோம் - முருகனை

சரணம்

சூரனை அழித்தவனை நக்
கீரனைக் காத்தவனை
தார மிரண்டுடையானை இத்
தரணியெலாம் இருப்பவனை - முருகனை

கார்திகைப் பெண்களிடம் மிக
நேர்த்தியாய் வளர்ந்தவனை
பன்னிருகை வேலவனை
முன்னிருந்து காப்பவனை - முருகனை

செந்தமிழ்க் கடவுளை திரு
தந்தருள் செய்வோனை
சிந்தனை செய்தே நாம்
வந்தனை செய்திடுவோம் - முருகனை

இராகம் : மத்யமாவதி **தாளம் :** திஸ்ரசாபு

10) **பல்லவி**

தேரில் வருகிறான் அப்பன் தேரில் வருகிறான்
தெய்வீக அருள் புரிந்தே தேரில் வருகிறான் - சித்திரத் தேரில்

அனுபல்லவி

ஓராறு முகங்களுடன் ஈராறு கரங்கள் கொண்டு
பாராரும் போற்ற அப்பன் தேரில் வருகிறான் - அப்பன் தேரில்

சரணம்

காலையூர் மக்கள் என்றும் கனிவுடனே வாழ
வேலை ஏந்தியவன் தேரில் வருகிறான்
மாலை அணி மார்பன் மயில் மீதமர்ந்தவன்
சாலை வழியாகத் தேரில் வருகிறான் - தேரில்

பாபச் சுமையறுத்துப் படுந்துன்பம் தனை அழிக்க
பன்னிரு தோள்களுடன் தேரில் வருகிறான்
ஆணவ வலியடக்கி ஆன்மாவை ஈடேற்ற
ஆறுமுகன் இன்று தேரில் வருகிறான் - தேரில்

சித்திரத் தேரதனில் சிங்காரமாய் முருகன்
பக்தர்கள் புடை சூழத் தேரில் வருகிறான்
சூரனைச் சங்கரித்த சுந்தர மூர்த்தியவன்
வீரத் திருமகனாய் தேரில் வருகிறான் - தேரில்

www.PeriyavaNet.com